







துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (21.11.2024) இந்த ஆண்டிற்கான நாகூர் தர்கா பெரிய ஆண்டவர் கந்தூரி சந்தனக்கூடு திருவிழாவிற்கு தமிழ்நாடு அரசு 45 கிலோ சந்தனக்கட்டைகளை கட்டணமின்றி வழங்கியதையொட்டி, நாகூர் தர்கா ஆலோசனைக் குழு தலைவர் சையது முகமது கலீபா சாஹிப் சந்தித்து நன்றி தெரிவித்தார். உடன் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடுவாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் எஸ்.எம். நாசர், பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை முதன்மைச் செயலாளர் சா. விஜயராஜ் குமார், மாநில சிறுபான்மையினர் நல ஆணையத்தின் உறுப்பினர் நாகூர் ஏ.எச். நஜிமுதீன் ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் இராணிப்பேட்டை ஆர்.காந்தி 21.11.2024 அன்று ஆஸ்திரேலியாவில் சிட்னி நகரில் உள்ள நியூ சௌத் வேல்ஸ் மாகாண பாராளுமன்றத்திற்கு வருகை புரிந்து அம்மாநிலத்தின் பிரிமியர் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடினார்.



முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் ஆலோசனையின் பேரில் கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் குந்தாரப்பள்ளியில் ஸ்ரீ குமரன் மஹால் திருமண மண்டபத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை அமைச்சர் சி.வி. கணேசன் தலைமையில் ஆதிதிராவிடர் நலக்குழு கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. கூட்டத்தில் கிருஷ்ண கிரி மேற்கு மாவட்டச் செயலாளர் ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., பி.முருகன், சின்னசாமி, ஜெயராமன், ரகுநாத், கருணாகரன், நாகேஷ், பாக்யராஜ் மற்றும் வி.முனிராஜ், முனிராஜ், சந்திரப்பா மற்றும் கோவிந்தன், வெங்கடாசலபதி, கர்னல் கரியப்பா, வெங்கட்ராப்பா, முனிராஜ் மற்றும் ஏராளமானோர் கலந்தாய்வு கூட்டத்தில் கலந்து கொண்டனர்.